# சட்டத்துறையும் - நீதி நிர்வாகமும் இணைந்து செயல்படுவதால் அமைதிப்பூங்காவாக தமிழகம் திகழ்கிறது!

## பேரவையில் அமைச்சர் எஸ். ரகுபதி பதிலுரை... 3 ஆம் பக்கத் தொடர்ச்சி

3 ஆம் பக்கத் தொடர்ச்சி

இன்றைக்கு கூறிய பல்வேறு கருத்துகளை நாங்கள் இங்கே குறித்து வைத்திருக்கிறோம். பேரவை உறுப்பினர்கள் நீதி நிர்வாகம் சார்பில் (குறுக்கீடு) சொல்கிறேன். 181வெட்டுத்தீர்மானங்களையும், சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையில் 117 வெட்டுத் தீர்மானங்களையும், சட்டத் துறையில் 70 வெட்டுத் தீர்மானங்களையும் ஆக மொத்தம் 368 வெட்டுத் தீர்மானங்களை கொடுத்துள்ளீர்கள். ஆக, எல்லாவற்றிற்கும் என்னுடைய பதிலுரையில் கொஞ்சம் விளக்கம் தந்திருக்கிறேன். மற்றவை எங்களுடைய குறிப்புகளில் இருக்கின்றன. அதற்கும் தகுந்த விளக்கங்களை நாங்கள் தருவதற்கு கடமைப்பட்டிருக்கின்றோம். எனவே, உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களை திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். எங்களுடைய சட்டத் துறை, நீதி நிர்வாகம், சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையில் இந்த 5 ஆண்டுக் காலம் சிறப்பாக நடைபெற இந்த ஆண்டிலே எங்களுக்கு உறுதுணையாக இருந்த நம்முடைய தலைமைச் செயலாளர் மரியாதைக்குரிய ந. முருகானந்தம், அவர்களுக்கும், நிதித் துறைச் செயலாளர் த. உதயச்சந்திரன், அவர்களுக்கும், முதலமைச்சரின் முதன்மைச் செயலாளர் உமாநாத், அவர்களுக்கும், செயலாளர் எம்.எஸ். சண்முகம், அவர்களுக்கும், இணைச் செயலாளர் ஜி.லெட்சுமதி, அவர்களுக்கும், முதலமைச்சரின் முதன்மை தனிச் செயலாளர் என்றும் எங்களுக்கு உதவியாக இருக்கக்கூடிய எம். தினேஷ் குமார் அவர்களுக்கும் மற்றும் இந்த கொள்கை விளக்கக் குறிப்பை தயாரிக்க மற்றும் இத்துறையினை கடந்த ஓராண்டாக சிறப்பாக நடத்த உறுதுணையாக இருந்த எங்கள் பாசத்திற்கும், மரியாதைக்குரிய உள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் க. தீரஜ்குமார், அவர்களுக்கும், சட்டத் துறைச் செயலாளர் ஜார்ஜ் அலெக்சாண்டர் அவர்களுக்கும், சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை தலைமை இயக்குநர் முனைவர் மகேஷ்வர் தயாள், அவர்களுக்கும், சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையினுடைய தலைமையிடத்துத் தலைவர் இரா. கனகராஜ் அவர்களுக்கும் மற்றும் ஒத்துழைப்பு நல்கிய எங்களது துறையினுடைய அனைத்து அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கும், என்னுடைய நெஞ்சம் நிறைந்து இருக்கின்ற திருமயம் சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், என்றும் எனக்கு உறுதுணையாக இருந்துவரும் புதுக்கோட்டை மாவட்ட மக்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உறுப்பினர்கள் தாங்கள் கொடுத்திருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களை வாபஸ் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டு, கடந்த 4 வருடங்களிலே நீதி நிர்வாகத்திலே 64 அறிவிப்புகள் கொடுக்கப்பட்டன. அவற்றில் முழுமையாக 50க்கு அரசாணை வெளியிடப்பட்டு, நிறைவேற்றப்பட்டிருக்கிறது. 13க்கு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. ஒன்று மட்டுமே நிலுவையில் உள்ளது.

சட்டத் துறை மானியக் கோரிக்கையின்போது, கடந்த நான்காண்டுகளில் 31 அறிவிப்புகள் வழங்கப்பட்டன. அரசாணை வெளியிடப்பட்டவை, 28. முழுமையாக நிறை வேற்றப்பட்டவை 25, அரசாணை வெளியிடப்பட்டது 1, நிலுவையில் உள்ளது 5.

சிறைகள் மற்றும் சீர்திருத்தத் துறையின்மீது, மொத்த அறிவிப்புகள் 45, அரசாணை வெளியிடப்பட்டு முழுமையாக செயல்படுத்தப்பட்டவை, 34, அரசாணை வெளியிடப்பட்டவை 9, நிலுவையில் உள்ளவை 2.

எனவே, உறுப்பினர்கள் இந்த 5 ஆண்டுகாலமும் சட்டத் துறை, சிறைத் துறை மற்றும் நீதி நிருவாகம் ஆகியவை சிறப்போடு நடைபெற, இத்துறைகளை சிறப்பான முறையில் நடத்திட, ஒத்துழைப்பு தந்திருக்கின்ற அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய மரியாதைக்கும், போற்றுதலுக்கும் நாங்கள் என்றைக்கும் வணங்குகிற எங்களுடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் அவர்ககளுக்கும் எங்களுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, வெட்டுத் தீர்மானங்களை திரும்ப பெற்றுக்கொண்டு மானியக் கோரிக்கையினை நிறைவேற்றித் தருமாறு சட்டமன்ற உறுப்பினர்களை அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**நீதி நிருவாகம்!**

1.திருநெல்வேலி மாவட்டம் வள்ளியூரில் ஒரு கூடுதல் மாவட்ட நீதிமன்றம் புதியதாக அமைத்தல்.

2.திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை யில் ஒரு சார்பு நீதிமன்றம் புதியதாக அமைத்தல்.

3.காஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூரில் ஒரு சார்பு நீதிமன்றம் புதியதாக அமைத்தல்.

திருவள்ளூர் மாவட்டம் ஆவடியில் ஒரு மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித் துறை நடுவர் நீதிமன்றம் புதியதாக அமைத்தல்.

கடலூர் மாவட்டம் ஸ்ரீமுஷ்ணத்தில் ஒரு மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் புதியதாக அமைத்தல்.

4.குழந்தைகளை பாலியல் குற்றங்களிலி ருந்து பாதுகாக்கும் சட்டம், 2012ன் கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை மட்டும் விசாரிப்பதற்காக சென்னை, ஈரோடு, கள்ளக்குறிச்சி, திருச்சிராப்பள்ளி, திருப்பூர், கிருஷ்ணகிரி, இராணிப்பேட்டை, திருப்பத்தூர், மயிலாடுதுறை, காஞ்சிபுரம், நாமக்கல், திருவாரூர், இராமநாதபுரம் மற்றும் நீலகிரி ஆகிய மாவட்டங்களில் தலா ஒரு சிறப்பு நீதிமன்றம் வீதம் 14 சிறப்பு நீதிமன்றங்கள் மூன்று கட்டங்களாக அமைத்தல்.

5. திருச்சிராப்பள்ளி மாவட்டம் திருச்சிராப்பள்ளியில் ஒரு கூடுதல் குடும்பநல நீதிமன்றம் புதியதாக அமைத்தல்.

6. குற்ற வழக்குத் தொடர்வுத் துறையிலுள்ள 325 குற்ற வழக்கு நடத்துநர்களின் பயன்பாட்டிற்காக சுப்ரீம் டுடே AI மென்பொருளை (Supreme Today AI Online) அதன் ஒரு வருட சந்தா தொகையான ரூ.13,03,900/ செலவினத்தில் கொள்முதல் செய்தல்.

7.குற்ற வழக்குத் தொடர்வு இயக்ககத்தின் பயன்பாட்டிற்கு புதிய அலுவலக அறைகலன்கள் ரூபாய் 10,21,138/செலவினத்தில் கொள்முதல் செய்தல்.

**சிறைகள் - சீர்திருத்தப் பணிகள்**

1. சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையின் கட்டடங்களுக்கான ஆண்டு பராமரிப்பு நிதியினை ரூபாய் 5 கோடியிலிருந்து ரூபாய் 10 கோடியாக உயர்த்தி வழங்குதல்.

2. மத்திய சிறை வளாகங்கள், மாவட்டச் சிறைகள் மற்றும் கிளைச் சிறைகளில் புனரமைப்பு பணிகள் மற்றும் புதிய வசதிகள் ஏற்படுத்துதல்.

3. சேலம் மாவட்டத்தில் கூடுதல் வசதிகளுடன் மாவட்டச் சிறைச்சாலை வளாகம் கட்டுதல்.

4.நாமக்கல் மாவட்டத்தில் புதிய மாவட்டச் சிறைச்சாலை வளாகம் அமைத்தல்.

5.தருமபுரி மாவட்டச் சிறைச்சாலையில் கூடுதலாக 300 சிறைவாசிகளை அனுமதிக்கும்வகையில் கூடுதல் இடவசதி ஏற்படுத்துதல்.

6.நன்னடத்தை பிரிவிற்கு 76 கணினிகள் மற்றும் துணைப் பொருட்கள் கொள்முதல் செய்தல்.

7.சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறையின் களப் பணியாளர்கள் மற்றும் சீர்திருத்தப் பணியாளர்களுக்கு CUG SIM Cards பெற்று வழங்குதல்.

8.புதிய உணவு முறைப்படி, உணவு தயாரிப்பதற்கு 9 மத்திய சிறைகள், 5 பெண்கள் தனிச் சிறைகள் மற்றும் 14 மாவட்டச் சிறைகளுக்கு தேவையான சமையல் உபகரணங்கள் கொள்முதல் செய்தல்.

9. பாலி கார்பனேட் லத்திகள், கேடயங்கள் மற்றும் கலவர தடுப்பு கவச உடைகள் கொள்முதல் செய்தல்.

இத்துடன் உறுப்பினர்கள் பேசுகின்றபோது, செஞ்சி, ஆத்தூர், ஒட்டன்சத்திரம், பண்ருட்டி ஆகிய தொகுதிகளிளெல்லாம் கூடுதல் நீதிமன்றங்கள் வேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். பண்ருட்டி, திருவெறும்பூர் போன்ற பகுதிகளுக்கான Administrative Sanction வந்துவிட்டன. (குறுக்கீடு) அரூருக்கு அவர்கள் சொல்லிவிட்டார்கள். இவற்றுக்கெல்லாம் உயர் நீதிமன்றத்திலிருந்து பரிந்துரைகள் பெறப்பட்டிருக்கின்றன. அவை உள்துறையின் பரிசீலனையில் இருக்கின்றன. அதன்பிறகு அவற்றை நிதித் துறைக்கு அனுப்பி, நிதிநிலைமைக்கேற்ப இந்த ஆண்டிலேயே அவற்றைக் கொண்டுவருவதற்கு உரிய வழிவகைகள் மேற்கொள்ளப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

மன்னார்குடியைப் பொறுத்தவரையில் இடம் பெறப்பட வேண்டும். அதனால்தான் நிலுவையில் உள்ளது. பிற தொகுதிகளுக்கு இடங்கள் இருக்கின்றன. வருவாத் துறைக்குச் சொந்தமான இடம் அங்கு இல்லை. நீங்கள் நகராட்சித் துறைக்குச் சொந்தமான இடத்தை நீங்கள் காண்பித்திருக்கிறீர்கள். அது 7,245 Sq.ft. என்று நினைக்கிறேன். அதற்கு அதிக அளவில் நிதி செலவாகும். நிதி அமைச்சர் அவர்களும் அருகில்தான் இருக்கிறார்கள். அவர் நிதி அளிப்பாரேயானால் துறைமூலம் அங்கும் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## அனைத்து சட்டக் கல்லூரிகளிலும் மின் நூலகம்

**சட்டத் துறை அறிவிப்புகள்**

1. அரசு சட்டக் கல்லூரிகளில் பணிபுரியும் உதவிப் பேராசிரியர்கள் மற்றும் இணைப் பேராசிரியர்களுக்கு ஆசிரியர் மேம்பாட்டு திட்டப் பயிற்சி (Faculty Development Programme) வழங்கப்படும்.

2. அரசு சட்டக் கல்லூரி மாணவர்கள் பயன்பெறும் வகையில் அனைத்து சட்டப் பாடப் புத்தகங்களும் தமிழில் மொழிபெயர்க்கப்படும் (Translation of Law Text Books)

3. அரசு சட்டக் கல்லூரிகளில் திறன் வகுப்பறை (Smart Class) அமைக்கப்படும்

4. அனைத்து அரசு சட்டக் கல்லூரிகளிலும் மின் நூலகம் (ELibrary) அமைக்கப்படும்

5. அரசு சட்டக் கல்லூரி மாணவர்களுக்கு சர்வதேச பயிற்சிப் பட்டறை (International Workshop) நடத்தப்படும்

6. தேசிய சட்டப் பல்கலைக்கழகங்கள் மற்றும் அயல்நாட்டு சட்டப் பல்கலைக்கழகங்களுடன் "மாணவர் பரிமாற்ற திட்டம்" (Student Exchange Programme) செயல்படுத்தப்படும்

7. அரசு சட்டக் கல்லூரிகளில் மாணவ, மாணவியர் விடுதிகள் புனரமைக்கப்படும்

8. திருச்சிராப்பள்ளி தேசிய சட்டப் பல்கலைக்கழகத்திற்கு தொகுப்பு நல்கை நிதி (Block Grant) வழங்கப்படும்

9. திருச்சிராப்பள்ளி தேசிய சட்டப் பல்கலைக்கழகத்திற்கு கூடுதல் மாணவியர் விடுதி கட்டடம் (Womens Hostel) கட்டப்படும்.

10. சட்டத் துறையில் மின்நூலகம் (ELibrary) அமைக்கப்படும்

உறுப்பினர் தளவாய் சுந்தரம் அவர்கள் திருச்சியில் இருக்கின்ற தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் சேர்க்கை குறைந்திருக்கிறது என்று கேட்டார்கள். அதைப் பொறுத்தவரையில் CLAT examination மூலமாகத்தான் மாணவர்கள் சேர்க்கை அனுமதிக்கப்படுகிறது. 50 சதவிகிதம் தமிழ்நாட்டிற்கும், 50 சதவிகிதம் வெளி மாநிலங்களுக்கும் ஒதுக்கப்படுகிறது. வெளிமாநிலங்களிலிருந்து வந்து இந்தக் கல்லூரியில் சேர்ந்து படிக்கும் மாணவர்கள், அவர்களுடைய மாநிலத்திலுள்ள கல்லூரிகளிலே இடம் கிடைத்தால் அங்கு சேர்ந்துவிடுகிறார்கள். அதனால் ஒன்று, இரண்டு vacancies வருகிறது. அதைத்தவிர வேறு ஒன்றும் கிடையாது. CLAT examination மூலமாக அவர்கள் தேர்வு செய்யப்படுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு அமைச்சர் எஸ்.ரகுபதி பதிலுரை வழங்கினார்.

---

### பெரம்பலூர் மாவட்ட கழக துணைச் செயலாளர்

## தழுதாழை பாஸ்கர் மனைவி விஜயா மறைவு!

### அமைச்சர் கே.என்.நேரு - வீ.ஜெகதீசன் - எம்.பிரபாகரன் அஞ்சலி!

பெரம்பலூர், ஏப். 6-

பெரம்பலூர் மாவட்ட கழக துணைச் செயலாளரும் மாவட்ட அறங்கவாளர் குழு உறுப்பினருமான தழுதாழை பாஸ்கர் துணைவியார் திருமதி பா. விஜயா என்பவர் இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

வேப்பந்தட்டை மேற்கு ஒன்றியம், தழுதாழை கிராமத்தில் அவரது இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த அவரது உடலுக்கு நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கே.என்.நேரு, மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன் ஆகியோர் அஞ்சலி செலுத்தி, மாவட்ட துணைச் செயலாளர் தழுதாழை பாஸ்கருக்கு ஆறுதல் கூறினார்கள்.

இதில் பெரம்பலூர் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் தங்க.சித்தார்த், குன்னம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் ஏ.கே.அருண், மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என். ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் செ.அண்ணாதுரை, பட்டுச் செல்வி ராஜேந்திரன், ஆர்.முருகேசன், அழகு. நீலமேகம், மாவட்ட துணைச் செயலாளர்கள் நூருல்ஹிதா இஸ்மாயில், சன். சம்பத், மாவட்ட பொருளாளர் செ. ரவிச்சந்திரன்,

ஒன்றிய கழகச் செயலாளர்கள் என்.கிருஷ்ணமூர்த்தி, எம். ராஜ்குமார், எஸ்.நல்லதம்பி, தி.மதியழகன், சி.ராஜேந்திரன், டாக்டர் செ.வல்லபன், ந.ஜெகதீஷ்வரன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஆதவன்(எ) ஹரிபாஸ்கர், துணை அமைப்பாளர் அ.அப்துல்கரீம், டி.ஆர்.சிவசங்கர், வ.சுப்ரமணியன், ஆர்.அருண், மா.பிரபாகரன், மற்றும் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

---

### தலைமை வி.வினோத்! முன்னிலை: எஸ்.முரளி – வே. வெற்றிவேல் - ஆர். ரேவதி!

## மயிலை கிழக்கு பகுதி விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் மாபெரும் கிரிக்கெட் போட்டி!

### மயிலை த.வேலு எம்.எல்.ஏ. - தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. பங்கேற்பு!

சென்னை, ஏப்.6 -

கழகத் தலைவர் முதல்வர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு சென்னை தென் மேற்கு மாவட்டம் மயிலை கிழக்கு பகுதி விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் மாபெரும் கிரிக்கெட் போட்டி இன்று (6.4.2025 ஞாயிற்றுக்கிழமை) மாலை 4.30 மணி அளவில் சாந்தோம் மேல்நிலைப் பள்ளியில் விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் வி.வினோத் தலைமையில் நடைபெறுகிறது.

இதில் பகுதிச் செயலாளர் எஸ். முரளி, வட்டச் செயலாளர் அ.வெற்றிவேல், அ.ரேவதி எம்.சி., ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இதில் மாவட்ட அமைப்பாளர் சி.ஐ.டி.நகர் ஆர்.குமரன், துணை அமைப்பாளர்கள் தெ.மோகன வேலன், டி.கண்ணன், பகுதி அமைப்பாளர் மற்றும் பகுதி துணை அமைப்பாளர் விளையாட்டு மேம்பாட்டு மேம்பாட்டு அணி பா.பிரகாஷ், கோ. ஜனார்த்தனன், கு.பிரகாஷ், ஈ.சிவா, என்.வி.தீபக், எஸ். தீபா, எஸ்.பாலமுருகன்,

என். இளங்கோவன், டி.தினகர், பி.முருகேசன், தா.வின்சென்ட், ஏ.ஆர். அமுல்ராஜ், எம்.டோமினிக், ரஞ்சிதம் எல்.ஆர்.சுரேஷ், எஸ்.மைக்கல் அகஸ்டின், கார்த்திக், தர்மபால், செல்வகுமார், முனுசாமி, மரியா ஆகியோர் வரவேற்கின்றனர்.

இப்போட்டியை மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. தமிழ்ச்சி தங்கபாண்டியன் ஆகியோர் பரிசுகளை வழங்குகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் மயிலை கிழக்கு பகுதி நிர்வாகிகள் செல்வி சௌந்தரராஜன், எஸ்.முனுசாமி, சீமென் கோ.சேகர், பி.எல்.தாஸ், ஏ.குமாரி, எல்.உதயகுமார்,

மயிலை கிழக்கு பகுதி வட்ட செயலாளர்கள் ஏ. தாஸ், மா.பா.அன்பு, அ.தவநேசன், கோ.கண்ணன், துரைபார்த்திபன், பா.பொன்னுசாமி, மாமன்ற உறுப்பினர்கள் விமலா கிருஷ்ணமூர்த்திஎம்,சி, கீதாமுரளி எம்,சி. வட்ட நிர்வாகிகள் இரா.க.இளங்கோவன், கருணாநிதி, சரவணகுமார், ரமேஷ், சிவா, சுகுமார், கோதண்டம், நிஜமுதின், ராஜன், இருதயராஜ்மேஷாக், ராஜரத்தினம், சர்சில், பிரகாஷ், சூசையம்மாள்,

லோகநாயகி, கமலநாதன், உஷா, செந்தில்குமார், சினிமாக்கேல், அமுல், அருண், லால், இருதயராஜ், சார்லஸ், பிலிப்ரோஸ், டி.சரவணன், டி.ராஜ், எஸ்.ஆனந்தன், பாக்கியராஜ், சகாயம்

இறுதியில் மு.நிரஞ்சன் சாய், A.விஷால்ராஜ், ஆர். சாமுவேல், கோட்டீஸ்வரன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.



சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பில் சேப்பாக்கம் திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதியில் பாக இளைஞர்களுக்கான சமூக வலைதள பயிற்சி கூட்டம் மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி, பகுதிச் செயலாளர் எஸ். மதன்மோகன், மாநில இளைஞரணி துணைச் செயலாளர் எஸ்.ஜோயல், ஆர்.ஜெகதீசன், கே.மகேஷ், ப.பிரபாகரன், ஏ.தமீம்அன்சாரி, ஜி.வெங்கடேசன், ப.பிரகாஷ், பி.பாலச்சந்தர், வி.தினேஷ், ஜெ.எம்.எச்.இம்ரான், என்.மோகனவேல், ஜி.ஜெ.கிரிதரன், அமைப்பாளர் ஏ.சஜாத் மற்றும் துணை அமைப்பாளர்கள், வட்ட அமைப்பாளர்கள், வட்ட துணை அமைப்பாளர்கள், பாக இளைஞரணி உறுப்பினர்கள் அனைவரும் பெருந்திரளாக பங்கேற்றனர்

---

### வேண்டாம் வேண்டாம் தொகுதி மறுசீரமைப்பு வேண்டாம் வாசகங்கள்:

## மாதவரம் வடக்கு பகுதி முழுவதும் சுவர் விளம்பரம்!

### புழல் எம். நாராயணன் தலைமையில் கழகத்தினர் தீவிரம்!

மாதவரம், ஏப். 6 -

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில், தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் அவர்களின் ஆணைப்படி, வேண்டாம் வேண்டாம் தொகுதி மறுசீரமைப்பு வேண்டாம், தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் ஆகிய வாசகங்கள் அடங்கிய சுவர் விளம்பரங்கள் வரையப்பட்டு வருகின்றன.

ஒன்றிய அரசு தென் மாநிலங்களை குறிவைத்து மக்கள் தொகை அடிப்படையில் தொகுதிகளை மறுவரையறை செய்ய வேண்டும் என்கின்ற வகையில் திருத்தம் கொண்டு வருவதை கண்டித்து, தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையில் அனைத்து மாநில முதலமைச்சர்கள் கூட்டம் கூட்டப்பட்டு மறுசீரமைப்பு தற்போது தேவையில்லை என்கின்ற வகையில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.




இதன் ஒரு பகுதியாக மறுசீரமைப்பு வேண்டாம் என்கின்ற நோக்கோடு தமிழ்நாடு முழுவதும் உள்ள மாவட்ட,பகுதி, வட்டக் கழகங்கள் தோறும் வேண்டாம் வேண்டாம், தொகுதி மறு சீரமைப்பு வேண்டாம், தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் என்கின்ற வாசகங்களை பொதுமக்கள் கூடுகின்ற சந்திப்புகளில் அனைத்து மக்களும் பார்க்கின்ற வகையில் சுவர் விளம்பரங்கள் செய்ய வேண்டும் என்று தலைமைக் கழகம் இட்ட ஆணையை ஏற்று, மாதவரம் வடக்கு பகுதிக்கு உட்பட்ட 17 வது வட்டம் செட்டிமேடு கொசப்பூர் சாலையில் பொதுமக்கள் அதிகம் கூடுகின்ற இடத்தில் உள்ள நூறு அடி நீளமுள்ள சுவற்றில் மேற்படி வாசகங்கள் அடங்கிய சுவர் விளம்பரம் பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் ஏற்பாட்டில் எழுதப்பட்டு வருகிறது. மேற்படி பணிகளை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம் நாராயணன் பார்வையிட்டு துரிதப்படுத்தினார்.

இந்த நிகழ்வில் 17 வது வட்டச் செயலாளர் கே. கருணாகரன், வட்டக் கழக நிர்வாகிகள் சி. மூர்த்தி,சி. பாலாஜி, பாக முகவர்கள் என். நாகராஜன், கே. சண்முகபிரியன், எஸ். சிவகுமார்,டி. திவாகர், வி.சுமீர்,ஜி. கார்த்திக், ஜான்சன், சுதர்சன், பூபாலன், ஜோசப், மைக்கேல், கார்த்திக் ,செந்தில், வக்கீல் எம்.என்.தளபதி தளபதி ஆகியோர் உடன் உள்ளனர்.

தொடர்ந்து இப்பணிகள் மாதவரம் வடக்கு பகுதியில் உள்ள அனைத்து வார்டுகளிலும் நடைபெற உள்ளது.

---

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆலோசனை வழங்குகிறார்!

## கலைஞர் நகர் 129 (அ) வட்டக் கழக ஆலோசனைக் கூட்டம்!

### ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா - க.தனசேகரன் - மு.ராஜா பங்கேற்பு! தஞ்சை பாபு தலைமை!

சென்னை, ஏப். 6 -

சென்னை தெற்கு மாவட்டம், கலைஞர் நகர் வடக்குப் பகுதி, 129 (அ) வது வட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் பி.எல்.ஏ.-2, பி.எல்.சி. ஆலோசனைக் கூட்டம் வட்டச் செயலாளர் தஞ்சை பாபு தலைமையில் காவிரி தெரு வட்ட அவைத் தலைவர் இல்லத்தில் இன்று (6.4.2025 - ஞாயிற்றுக் கிழமை) காலை 10.00 மணியளவில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன், விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி. பிரபாகர் ராஜா, தலைமை செயற்குழு உறுப்பினர் க.தனசேகரன் எம்.சி, பகுதிச் செயலாளர் மு.இராசா, வே.உமாகாந்த், ஆகியோர் கலந்து கொண்டு தேர்தல் பணி மற்றும் பணிகளை குறித்து ஆலோசனைகளை வழங்க இருப்பதால் 129 (அ) வது வட்டக் கழகச் செயல்வீரர்கள், பி.எல்.ஏ.2, பி.எல்.சி. ஆகியோர் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு தஞ்சை பாபு தெரிவித்துள்ளார்.

---

### தி.மு.தனியரசு தலைமையில் – பி.ஜி.அவினாஷ் ஏற்பாட்டில்

## திருவொற்றியூர் கிழக்குப் பகுதி இளைஞரணி சார்பில் தண்ணீர் பந்தல்!

### மாதவரம் எஸ்.சுதர்சனம் - கலாநிதி வீராசாமி - கே.பி.சங்கர் பங்கேற்பு!

சென்னை, ஏப். 6 -

சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் கிழக்கு பகுதி இளைஞர் அணி சார்பில் திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர் 1வது மண்டல குழு தலைவர் தி.மு.தனியரசு தலைமையில் வார்டு 9 பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் பி.ஜி. அவினாஷ் ஏற்பாட்டில் திருவொற்றியூர் மார்க்கெட் பகுதியிலும், வார்டு 10

பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் கே.மோகன்ராஜ் ஏற்பாட்டில் இன்று (6.4.25) சன்னதி தெருவிலும், வார்டு 10 பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் கார்த்திக் ராஜா ஏற்பாட்டில் வடக்கு மாடவீதி தெரு, ஐயப்பன் கோயில் அருகிலும் தண்ணீர் பந்தலை சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. திறந்து வைக்கிறார்.

இதில் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் ஆகியோர் பங்கேற்க உள்ளனர்.

ஆகையால் மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள்,

செயற்குழு உறுப்பினர்கள், பகுதி நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட பகுதி, வட்ட அணியின் நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொள்ளும் படி கேட்டு கொள்கிறேன்.

இவ்வாறு பி.வி.அவினாஷ் கேட்டுக்கொண்டுள்ளார்.